18

KALANITHI SERIES

# SECOND READER

T. A. RAJARUTHNAM PILLAI

Madras
T. V. Chellappa Sastri & Sons

# இரண்டாம் வாசக புத்தகம்

இது

பற்பல பாடசாலைப் புத்தகங்களின் ஆக்கியோனும்,

முன்னர், சென்னைக் கிறீஸ்தவ கலாசாலையைச்

சேர்ந்த பாடசாலையில் ஆசிரியனுமான

தெ. அ. இராஜரத்தினம் பிள்ளை

அவர்களால்

எழுதப்பட்டது.

சென்னை

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு ஸன்ஸ்

வெளியிட்டது.

காப்பிரைட் ரிஜிஸ்தர் செய்தது] [விலை அணு 3.

T. V. C. PRESS,
1-1, Sembudoss Street,
Broadway, Madras.

# புறவுரை

பூவுலகின் கண்ணுள்ள மாந்தர் சிறப்படைவதற்குக் கல்வியே முக்கியமான சாதனமென்பதும், கல்வியே எல்லாச் செல்வங்களுக்கும் மேலான தென்பதும் அனைவரும் ஒப்புக் கொள்ளும் விஷயம். இதை நமது துரைத்தனத்தாரும் அங்கீகரித்து, கல்வியை விருத்தி செய்வதற்காகப் பற்பல பாடசாலைகளை ஸ்தாபித்து வெகு முயற்சி செய்து வருகின்றனர். சிறுவர்கள் முதலில் தங்கள் சுய பாஷையையே பிழையற எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். எழுத, வாசிக்கத் தெரியாதவர்கள் மரத்துக்குச் சமமென்பது,

"நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனே மரம்,"

என்னும் செய்யுளாற் பெறப்படும். ஆகையால், நமது தேசத்தில் பிரதம கல்வியை (Elementary Education) விருத்தி செய்வதற்கு இராஜாங்கத்தாராலும், சுய அரசாட்சி சபைகளாலும், சில தேசாபிமானிகளாலும் பெரு முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. பத்து வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமிகள் அவசியம் கல்வி கற்கவேண்டுமென்று சில விடங்களிற் கட்டாயப்படுத்தியும் வருகின்றார்கள். கூடிய சீக்கிரம் கட்டாயக் கல்வி (Compulsory Education) நமது தேசமெங்கும் பரவிவிடு மென்பதிற் சிறிதும் சந்தேகமே இல்லை.

பிரதம கல்வியைப் பயிற்றும் பாடசாலைகளிலுள்ள மாணாக்கர்களுக்கு அனுகூலமாக நாம் கலாநிதித் தொடர்

என்னும் இப் புத்தகத் தொடரை நவீனமாயியற்றி அச்சிட்டுள்ளோம். இத் தொடர்ப் புத்தகங்களில், மாணுக்க ருள்ளத்தை வசீகரித்து நல்லறிவுறுத்தும் நீதிக்கதைகளும், சுகதாரம், பூமி சாஸ்திரம், இயற்கைச் சாஸ்திரம், வான சாஸ்திரம், தாவர சாஸ்திரம், அங்க ஜீவ சாஸ்திரம், ராஜாங்க முறை முதலியவைகளைப் பற்றி மாணுக்கர் அவசிய மறிய வேண்டிய சாதாரண விஷயங்களும், பொருட்பாடங்களும், நீதி போதனைகளும், அந்தந்த வகுப்புக்குத் தகுந்தவாறு சுலபமான தெள்ளிய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளன. ராஜ பக்தி, தேசாபிமானம் முதலியன மாணுக்கர்பால் சிறு பருவத்தே யுதிக்கவேண்டிய அரும்பெரு மிலக்கணங்களென் றுணர்ந்து, அவை அன்னோர் மனதில் பசுமரத்தாணிபோற் பதியும்வண்ணம், சிற்சில பாடங்களை ஆங்காங்கு அமைத்துள்ளோம். நமது தேசம் விவசாயத்தால் விருத்தியடைய வேண்டுமென்னும் நோக்கத்தோடு, விவசாயத்தின் பெருமையையும், விவசாய முறைகளையும் விளக்கும் சில பாடங்களையும் இத் தொடர்ப் புத்தகங்களில் சேர்த்திருக்கின்றோம். இன்னும் இக்கால சாஸ்திர வாராய்ச்சியின் பயனுகத் தோன்றியுள்ள மோட்டார் வண்டி, ஆகாய விமானம், சப்மரீன், நீராவிக் கப்பல் முதலியவைகளைப் பற்றிப் பிரதம கல்வி பயிலும் மாணவர் எவ்வளவு அறியக் கூடுமோ அவ்வளவு கூறியுள்ளோம். தமிழ் நாட்டினுள்ள பாடசாலைகளில் எண்ணிறந்த தமிழ்ப் பாட புத்தகங்கள் வழங்கி வருகின்றனவாயினும், நமது கலாநிதித் தொடர் புதிய பல் விஷயங்களை அரிய செந்தமிழ் நடையில், மாணுக்கர் சக்திக்கிசைந்தவாறு கூறுமோர் புதுத் தொடரென்பது எம் துணிபு.

இத்தகைய பாடபுத்தகங்களில் செய்யுட் பாடங்களையும் அமைப்பது பெரு வழக்காதலின், நாமும் அவ் வழக்

கத்தை மேற்கொண்டு, ஔவை பாடல், நீதிவெண்பா, பஞ்சதந்திரப் பாடல், பட்டணத்தார் பாடல், தனிப்பாடல் முதலியவற்றிலிருந்தும் மாணுக்கர் சக்திக்குத் தக்கவாறு சில பாடல்களைச் சேர்த்துள்ளோம். இத் தொடர்ப் புத்தகங் களில் தோன்றும் படங்களில் அநேகம் அவைகளுக்கென்றே செய்யப்பட்டவை. ராஜபக்திக் கறிகுறியாக நமது அரசரின் மூத்த குமாரராம் உவேல்ஸ் இளவரசருடைய படமொன்றை இத் தொடர்ப் புத்தகங்களின் முகப்பில் தீட்டி யிருக்கின் ரேம்.

இவை தமிழ் நாடெங்ஙனும் பரவி, நாம் கருதியவாறு மாணுக்கருக்குப் பெரும்பயனை விளைவிக்க வேண்டுமென் பதே நமது கோரிக்கை. ஆகையால், பாடசாலைத் தலைவர் களும், உபாத்திமார்களும், சகல வித்தியா அபிமானிகளும் நமது முயற்சியைப் பெரிது மாதரித்து, இத் தொடர்ப் புத் தகங்களை நல்வரவு கூறி, அங்கீகரிப்பரென்று எதிர்பார்க்கின் ரேம். நாம் கொண்டிருக்குங் கோரிக்கை நிறைவேறுமாறு எல்லாம் வல்ல ஈசனைப் பிரார்த்திக்கின்ரேம்.

T. A. R.

# பொருளடக்கம்


| நெ. | பாடங்கள். | பக்கம். |
| --- | --- | --- |
| 1—13. | வாக்கிய பாடங்கள் ... ... | 1—14 |
| 14. | நாய் ... ... ... ... | 15 |
| 15. | விளக்கும் பூச்சியும் ... ... | 17 |
| 16. | தொழிலாளிகள் ... ... | 20 |
| 17. | பூனை ... ... ... | 24 |
| 18. | பூனையின் கதை... ... ... | 27 |
| 19. | காற்றாடியும் சிறுவனும் ... ... | 30 |
| 20. | காற்று ... ... ... | 33 |
| 21. | தண்ணீர் ... ... ... | 36 |
| 22. | ஆறுகளும் குளங்களும் ... ... | 39 |
| 23. | சூரியன் ... ... ... | 42 |
| 24. | திசைகள் ... ... ... | 45 |
| 25. | எறும்பு ... ... ... | 47 |
| 26. | எறும்பின் கதை ... ... | 50 |
| 27. | எறும்புப் பாட்டு ... ... | 52 |
| 28. | ஏர் உழுதல் ... ... ... | 54 |
| 29. | நீரில் விழுந்த சிறுவன் ... ... | 56 |
| 30. | வயல் ... ... ... | 59 |
| 31. | நெல்லு ... ... ... | 62 |
| 32. | ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ... ... | 65 |
| | **செய்யுட் பாடம்** | |
| 1. | உலகநீதி ... ... ... | 69 |
| 2. | ஆத்திசூடி ... ... ... | 72 |



நமது இளவரசர்.

# ராஜவாழ்த்து

1. எங்கள் சீமை மகாராஜன்
   என்றும் வாழ்க இங்கிதமாய்

2. மன்னர் மன்னன் குண சீலன்
   மகிதலத் தோர்புகழ் மணிமார்பன்

3. சுந்தர ரூபன் துரைராஜன்
   தூமணி என்றும் புகழுடையோன்

4. மன்னன் எட்வர்ட் புத்திரனும்
   மாநிலத் தோர்க்கொரு மித்திரனும்

5. மேரி அரசி மைந்தரு டன்
   மேவும் குடும்பம் நனிவாழ்க

6. வாழ்க வாழ்க நிதம் வாழ்க
   மாநில மெங்ஙனும் புகழ்சூழ்க.

கலாநிதித் தொடர்

# இரண்டாம் வாசக புத்தகம்.




## முதலாம் பாடம்.

1. இது ஒரு சிறு கன்று.
2. இதன் நிறம் சுத்த வெள்ளை.
3. அந்தக் கன்று கறுப்பு நிறம்.
4. கன்று தின்னும் உணவு என்ன?
5. புல், கன்று தின்னும் உணவு.

6. இளம் கன்று பால் குடிக்கும்.
7. பசு நல்ல பால் கொடுக்கும்.
8. பால் மிகவும் நல்ல உணவு.
9. பால் உனக்குச் சுகம் தரும்.
10. கன்றுக் குட்டி துள்ளி ஓடும்.



## இரண்டாம் பாடம்.

1. இது ஒரு பெரிய பறவை.
2. இதன் பெயர் மயில்.
3. மயில் வெகு அழகாய் இருக்கும்.
4. அது காட்டில் வாழும் பறவை.
5. அதன் தலை மிகவும் சிறியது.
6. மயில் சிறகை விரித்து ஆடும்.
7. மயில் இறகு விசிறி ஆகும்.
8. மயில் பாம்பைத் தின்னும்.
9. அது வெகு தூரம் பறக்கும்.
10. ஆண் மயிலுக்குத் தோகை உண்டு.




## மூன்ரும் பாடம்.

| | | |
|---|---|---|
| கீரி | பிள்ளை. | கீரிப்பிள்ளை. |
| சாரை | பாம்பு. | சாரைப்பாம்பு. |
| கீரை | பாத்தி. | கீரைப்பாத்தி. |
| வாழை | பழம். | வாழைப்பழம். |
| அரிசி | கடை. | அரிசிக்கடை. |
| கோழி | குஞ்சு. | கோழிக்குஞ்சு. |
| பூனை | குட்டி. | பூனைக்குட்டி. |
| கெட்டி | காப்பு. | கெட்டிக்காப்பு. |

1. கீரிப்பிள்ளை காட்டில் வாழும்.
2. சாரைப்பாம்பு மஞ்சள் நிறம்.
3. கீரைப்பாத்தி அங்கே உண்டு.
4. வாழைப்பழம் மிகவும் மலிவு.
5. அரிசிக்கடை இதோ இருக்கிறது.

6. கோழிக்குஞ்சு ஓடி வந்தது.
7. பூனைக்குட்டி பால் குடித்தது.
8 கெட்டிக்காப்பு தட்டான் செய்தான்.

---



## நான்காம் பாடம்-

| | | |
|---|---|---|
| மா | காய். | மாங்காய். |
| விளம் | காய். | விளங்காய். |
| பனை | காய். | பனங்காய். |
| சேம்பு | கிழங்கு. | சேப்பங்கிழங்கு. |
| பூ | செடி. | பூஞ்செடி. |
| கருமை | சீரகம். | கருஞ்சீரகம். |
| கரும்பு | சாறு. | கருப்பஞ்சாறு. |

1. பூஞ்செடி நட்டான்.
2. கருஞ்சீரகம் மருந்துக்கு உதவும்.
3. மாஞ்செடி முளைத்து வளர்ந்தது.

4. கருப்பஞ்சாறு கொண்டு வந்தான்.
5. சேப்பங்கிழங்கு நல்ல பதார்த்தம்.
6. மாங்காய் மரத்தில் காய்க்கும்.
7. விளங்காய் பழுத்து விழுந்தது.
8. பனங்காய் நுங்கு ஆகும்.

---



## ஐந்தாம் பாடம்.

| | | |
|---|---|---|
| ஆடு | குட்டி. | ஆட்டுக்குட்டி. |
| ஆறு | கால். | ஆற்றுக்கால். |
| சிறு | எறும்பு. | சிற்றெறும்பு. |
| காடு | வழி. | காட்டு வழி. |
| நாடு | புடைவை. | நாட்டுப்புடைவை. |
| புளி | பழம். | புளியம்பழம். |
| ஆல் | பழம். | ஆலம்பழம். |

1. ஆட்டுக்குட்டி இலையைத் தின்றது.
2. ஆற்றுக்காலில் தண்ணீர் போகிறது.

3. சிற்றெறும்பு வளையில் இருக்கும்.
4. காட்டு வழி அபாயம் ஆனது.
5. நாட்டுப்புடைவை அவள் கட்டினாள்.
6. புளியம்பழம் புளிப்பாய் இருக்கும்.
7. ஆலம்பழம் காக்கைக்குப் பிரியம்.

---



## 6. உறுப்புகளின் தொழில்.

1. நாம் கண்களால் பார்க்கிறோம்.
2. காதுகளால் கேட்கிறோம்.
3. வாயினால் சாப்பிடுகிறோம்; பேசுகிறோம்.
4. பற்களினால் மெல்லுகிறோம்.
5. நாவினால் சுவை அறிகிறோம்.
6. மூக்கினால் வாசனை அறிகிறோம்.
7. தலையினால் வணங்குகிறோம்.
8. கைகளால் வேலை செய்கிறோம்.
9. கால்களால் நடக்கிறோம்.
10. உடம்பினால் உணர்ந்து அறிகிறோம்.

11. நமக்கு ஒரு உடம்பு உண்டு.
12. அதைக் கடவுள் படைத்தார்.
13. அவர் எங்கும் இருக்கிறுர்.
14. அவரை நாம் வணங்க வேண்டும்.

---



## 7. நிறங்கள்.

1. காக்கை கறுப்பு நிறம்.
2. பால் வெள்ளை நிறம்.
3. இரத்தம் சிவப்பு நிறம்.
4. பொன் மஞ்சள் நிறம்.
5. கிளி பச்சை நிறம்.
6. ஆகாயம் நீல நிறம்.
7. நாவல் பழம் ஊதா நிறம்.
8. வெள்ளை சுத்தமான நிறம்.
9. பச்சை நிறம் குளிர்ச்சி.
10. சிவப்பு, மஞ்சள், நீலம் மூன்றும் முக்கியமான நிறங்கள்.
11. சிவப்பும் மஞ்சளும் சேர்ந்தால் கிச்சிலி வர்ணம் ஆகிறது.
13. பூசணிப்பழம் கிச்சிலி நிறம்.




## 8 அளவு வடிவம்.

1. பைசா வட்டம் ஆனது.
2. பேனா நீளம் ஆனது.
3. பலகை அகலம் ஆனது.
4. பனை உயரம் ஆனது.
5. வாழை குள்ளம் ஆனது.
6. குளம் ஆழம் ஆனது.
7. தெரு மேடு ஆனது.
8. தகடு அச்சம் ஆனது.
9. சுவர் கனம் ஆனது.
10. நூல் மெல்லியது.
11. கயிறு கனம் ஆனது.
12. பந்து உருண்டை ஆனது.
13. சுவரில் மாடம் முக்கோணம்.
14. திருக்குளம் நாற்கோணம்.
15. மணை தட்டை ஆனது.

## 9. ஒலிக்குறிப்புகள்.

1. சிறுவர்கள் கோல்லென்று சிரித்தார்கள்.
2. குருவிகள் பொள்ளெனப் பறந்தன.
3. காது கும்மென்று அடைத்தது.
4. ஜலம் குபீரென்று வந்தது.
5. அவன் திடுதிடு என்று வந்தான்.
6. பானை மளமள என்று உடைந்தது.
7. அவன் கடகட என்று ஒப்பித்தான்.
8. தண்ணீர் கொள கொள என்று கொதித்தது.
9. அவன் சளசள என்று பேசினான்.
10. அவள் சிடுசிடு என்று பேசினாள்.
11. சிறுவன் திடுதிடு என்று ஓடினான்.
12. சக்கரம் கிறுகிறு என்று சுற்றினது.
13. அவன் படபட என்று பேசினான்.
14. பையன் மடமட என்று நடந்தான்.

---



## 10. பிராணிகளின் சப்தம்.

1. பசு கதறும்.
2. நாய் குரைக்கும்.
3. பூனை சீறும்.

4. ஆடு கத்தும்.
5. குதிரை கனைக்கும்.
6. கழுதை கத்தும்.
7. நரி ஊளையிடும்.
8. பாம்பு சீறும்.
9. சேவல் கூவும்.
10. புறு கூவும்.
11. காக்கை கா! கா! என்று கரையும்.
12. தேனீ பாடும்.
13. கோழிக்குஞ்சு கியா! கியா! என்று கத்தும்.
14. பருந்து அழும்.
15. வாத்து குவாக்! குவாக்! என்று கத்தும்.
16. சிங்கம் கர்ச்சிக்கும்.
17. யானை பிளிறும்.

---

## பதினொன்றும் பாடம்.

இராமன் மிகவும் நல்ல பையன்.
அவன் நன்றாய்ப் பாடம் படிப்பான்.
பிரதிதினமும் பள்ளிக்குப் போவான்.
ஓய்வு நேரத்தில் வளையம் உருட்டுவான்.
துஷ்டவேலை ஒன்றும் செய்யான்.
துஷ்டரோடு சேரமாட்டான்.
பெற்றோர் வார்த்தையைத் தள்ளமாட்டான்.
உபாத்தியாயர் சொல்லைக் கேட்டு நடப்பான்.



காலையில் சீக்கிரம் எழுந்து இருப்பான்.

நித்திய கடனை முடித்துக் கொள்வான்.

தேகத்தைச் சுத்தியாய் வைத்துக்கொள்வான்.

அவன் உடை சுத்தமாய் இருக்கும்.

நல்ல ஆகாரத்தை மிதமாய்ச் சாப்பிடுவான்.

சுத்த தண்ணீரையே குடிப்பான்.

ஆகையால் அவனுக்கு வ்யாதி வராது.



## பன்னிரண்டாம் பாடம்.

இவர் யார்? உங்களுக்குத் தெரியுமா?
இவர் நமது அரச குமாரர்

இவர் நல்ல குணம் உடையவர்.
இவர் ஒரு முறை இங்கு வந்தார்.
இவர் இப்பொழுது சீமையில் இருக்கிறார்.
உங்களை இவர் நேசிக்கிறார்.
நீங்களும் அவரை நேசிக்க வேண்டும்.
அரசர் குமாரரில் இவர்தான் மூத்தவர்.
இவருக்கு இளவரசர் என்று பெயர்.
நமது அரசருக்கு ஜார்ஜ் என்று பெயர்.
அவருக்குப் பின் இவரே அரசர் ஆவார்.

---

## பதின்மூன்றாம் பாடம்.

மறுபக்கத்தில் இருக்கும் படத்தைப் பாருங்கள்.
அதில் ஒரு பையன் வாசிக்கிறான்.
அவனுடைய முகம் நன்றாய்த் தெரிகிறது.
நீங்கள் சரியான முறையில் வாசிக்கவேண்டும்.
வாசிக்கையில் கேட்பவருக்கு எதிர் முகமாய் நில்லுங்கள்.
இப்புறமும் அப்புறமும் சாய்தல் கூடாது.
பெரிய இரைச்சலோடு வாசித்தல் ஆகாது.
மிக மெதுவாகவும் வாசித்தல் கூடாது.
ஒவ்வொரு வார்த்தையையும் தெளிவாய் உச்சரியுங்கள்.
அதிக துரிதமாய் வாசித்தலும் கூடாது.
நிறுத்தவேண்டிய இடங்களில் நிறுத்துங்கள்.
நிறுத்துக் குறிகளைக் கவனிக்கவேண்டும்.




எல்லோருக்கும் கேட்கும்படி வாசிக்கவேண்டும்.
புஸ்தகத்தால் முகத்தை மறைத்தல் ஆகாது.

## பதினான்காம் பாடம்.

1. நாய் சாதாரணமாய் நமது வீடுகளில் வளரும் பிராணி. அது மிகவும் நன்றியுள்ள ஜந்து. அதன் உடல் நீண்டு, பின் பக்கத்தில் ஒடுங்கி இருக்கும். உடல் முழுவதும் மயிர் முளைத்திருக்கும். சில நாய்களுக்கு மயிர் நீளமாய் இருக்கும்; சில நாய்களுக்குக் குட்டையாய் இருக்கும். நாய்களுக்குப் பெரும்பாலும் மயிர் ஒழுங்காய் இருக்கும்; ஆனால் சிலவற்றிற்குச் சுருண்டு இருக்கும்.



2. நாயின் முகம் நீளமாய் இருக்கும்; சில நாய்களுக்கு முகம் உருண்டை. நாய்க்கு இரண்டு காதுகள் உண்டு. அவை சில நாய்களுக்கு நிமிர்ந்தும், சில நாய்களுக்கு மடிந்தும் இருக்கும். நாயின் காதுகள் வெகு கூர்மையானவை. சிறிய சப்தத்தையும் அக் காதுகளால் நாய் கேட்டு அறிந்துகொள்ளும்.

3. நாயின் வாய் விசாலமானது. அதன் தாடை உறுதியாயும், பற்கள் கூர்மையாயும் இருக்கும். பற்களால் அது மாமிசத்தைக் கடித்துக் கிழித்துத் தின்னும். அதன் நாக்கு நீளமானது. அது ஓடும்போது நாக்கைத் தொங்க விடும். அதன் நாக்கிலிருந்து நீர் வடிந்து கொண்டே இருக்கும். நாய் தண்ணீரை நாக்கினால் நக்கிக் குடிக்கும்; பசுவைப்போல ஜலத்தில் வாயை வைத்துக் குடிப்பது இல்லை.

4. வாய்க்கு மேலாக மூக்கு அமைந்து இருக்கிறது. சில ஜாதி நாய்களுக்கு மூக்கு சிறிதாயும், சில ஜாதி நாய்களுக்கு மூக்கு நீண்டும் இருக்கும். மூக்கினால் நாய் மோப்பம் பிடிக்கும். நாய்க்கு முகத்தில் மீசை மயிர் உண்டு.

5. நாய்க்கு நான்கு கால்கள் உண்டு; அவை சில நாய்களுக்கு நீளமாய் இருக்கும்; சில நாய்களுக்குக் குட்டையாய் இருக்கும். அதன் முன் கால்களில் ஐந்து விரல்களும், பின்கால்களில் நான்கு விரல்களும் இருக்கின்றன. அதன் பாதம் மெத்தென்று இருக்கும். ஒவ்வொரு விரலிலும் ஒவ்வொரு தடிப்பான நகம் உண்டு. நாயின் கால்களில் நரம்பு அடர்ந்து இருக்கும். ஆகையால் அது மிகவும் வேகமாய் ஓட இயலும். நாயின் வால் நீண்டு வளைந்திருக்கும்.

6. நாய் மாமிசம், சோறு, மீன் முதலியவைகளைப் பிரியமாகத் தின்னும். எலும்பைக் கடிப்பதில் அதற்கு வெகு இஷ்டம். சில நாய்கள் ரொட்டி, பழம் முதலியவைகளையும் தின்னும்.

உன் கையில் தின்பண்டம் இருந்தால், நாய் அதைக் குறிப்பாய்ப் பார்த்து, வாலை ஆட்டி, அது தனக்கு வேண்டும் என்று குறிப்பிக்கும்.

7. நாய் தன்னைவளர்ப்பவர் இடத்தில்மிக்க அன்பு உள்ளது. தன்னைவளர்ப்பவருக்கு ஆபத்து வந்தால் அது அவரைக்காப்பாற்றும்; உண்மையாய் அவருக்கு ஊழியம் செய்யும். வீட்டில்திருடர் வராதபடி பாதுகாக்கும். ஆகையால்நாயை அன்பாய் வளர்க்கவேண்டும்.

---

## பதினைந்தாம் பாடம்.

### விளக்கும் பூச்சியும்.

1. ஒரு மேசையின்மேல் ஒரு விளக்கு மிகப் பிரகாசமாய் எரிந்துகொண்டு இருந்தது. அதன் ஒளி எங்கும் பரவி இருந்தது. அதைக் கண்ட பூச்சி ஒன்று சமீபத்தில் வந்தது. அந்த விளக்கின் வெளிச்சத்தை ஒரு பூ என்று எண்ணிக்கொண்டது.

2. "ஓகோ! இந்தப் பூ எவ்வளவு அழகாய் இருக்கிறது! இதில் நிரம்பத் தேன் இருக்கும். நான் இதிலுள்ள தேனைக் குடிப்பேன்; என் பசியைத் தீர்ப்பேன்; இன்பம் அடைவேன்" என்று அந்தப் பூச்சி தனக்குத் தானே சொல்லிக் கொண்டது.

3. அப்பொழுது சமீபத்தில் இருந்த அதன் தாய் அவ் வார்த்தைகளைக் கேட்டது. 'ஐயோ! வெளிச்சம் பூவாகுமா? அதில் தேன் எங்



கிருந்துவரும்? என்ன மூடத்தன்மை? நான்என் குழந்தைக்குப் புத்தி சொல்லுவேன்,' என்று தனக்குள் சொல்லிக் கொண்டது. உடனே அது அந்தப் பூச்சியைப் பார்த்து, "குழந்தாய்! நீ கொண்ட எண்ணம் சரியல்ல. அந்த வெளிச்சம் பூ அல்ல; அதில் தேன் இல்லை; நீ சமீபத்தில் போனால் சாவது நிச்சயம்" என்றது.

4. அதைக்கேட்ட அந்தச் சிறு பூச்சி, "போ! போ! உனக்கு என்ன தெரியும். உனக்குக் கண் இல்லை. அழகான பூவை பூ அல்ல, என்று சாதிக்கிறாய். பூவில் தேன் இல்லாமல் போகுமா?" என்றது.?

5. உடனே தாய், "பதருதே, சும்மா இரு; நீ பூ என்று சொல்வது விளக்கின் வெளிச்சம். அதில் நெருப்பு எரிந்துகொண்டு இருக்கிறது. அது மிக உஷ்ணமானது. நீ அதன் சமீபத்தில் போனால் உடல் எரிந்து சாவாய். ஆகையால் நீ கிட்டப்போகாதே! என்பேச்சைக் கேள்," என்றது.

6. அந்தச் சிறு பூச்சி தாயின் வார்த்தையைக் கேட்கவில்லை. அது தாயைப் பார்த்து, "உனக்குப் புத்தி இல்லை; கண்ணுக்கு எதிரே புஷ்பம் இருக்கிறது; நீ இல்லை என்று ஏன் பொய்சொல்லுகிறாய்" என்று சொல்லிப் பறந்து போயிற்று.

7. அப்பொழுது தாய், "பொறு, பதருதே, நன்றாய் யோசித்துப்பார்; தோற்றத்தைக் கண்டு மயங்காதே. அது புஷ்பமல்ல; கொடிய நெருப்பு. நீ கிட்டப்போகாதே! போனால் சாவாய்," என்றது.

8. சிறு பூச்சி, "சரிதான், உனக்குப் பயித்தியம்; உன் பேச்சைக் கேட்கமாட்டேன்,' என்று சொல்லிக்கொண்டு விளக்கின் சமீபத்தில் பறந்து போயிற்று. விளக்கின் சுவாலை பட்டுச் சிறகுகள் எரிந்து மேசைமேல்விழுந்தது. வேதனை சகிக்கமாட்டாமல் துடி துடித்துக் கிடந்தது. 'ஐயோ!' என் தாய் சொன்ன

நற்புத்தியைக் கேளாமல் போனேனே!' என்று சொல்லி இறந்துபோயிற்று.

9. இந்தப் பாடத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ளும் நீதி என்ன? வெளித்தோற்றத்தைக் கண்டு மயங்கல் ஆகாது. நன்றாய் நிதானித்துப் பார்க்கவேண்டும்; பெரியவர்கள் சொல்லும் வார்த்தையைக் கேட்கவேண்டும். இல்லாவிட்டால் ஆபத்து நேரிடும்.

---

## பதினாறும் பாடம்.



### தொழிலாளிகள்.

1. நாம் உயிரோடிருக்க வேண்டுமானால், நமக்கு ஆகாரம் வேண்டும். ஆகாரத்தைச் சம்பாதிக்க நாம் பலவிதமான தொழில்களைச் செய்கிறோம். ஒவ்வொரு தொழிலைச் செய்கிறவர்களுக்கும் ஒவ்வொரு பெயர் இட்டிருக்கிறார்கள்.

2. மரவேலை செய்கிறவன் தச்சன். இவன் பெட்டி, மணை, மேசை, நாற்காலி முதலிய மரச் சாமான்களைச் செய்வான்.

3. இரும்புவேலை செய்கிறவன் கருமான் இவனுக்குக் கொல்லன் என்றும் பெயர் உண்டு. இவன் மண்வெட்டி, கடப்பாரை, அரிவாள். கத்தி முதலிய இருப்புச் சாமான்களைச் செய்வான். தச்சனுக்கு வேண்டிய இரும்பு ஆயுதங்களையும் இவன் தான் செய்யவேண்டும்.



4. நகை வேலை செய்கிறவன் தட்டான் இவன் பொன், வெள்ளி முதலியவற்றில் பல வகையான மணிகளைப் பதித்து அழகான வேலைசெய்வான்; கம்மல், காப்பு, அட்டிகை முதலிய எல்லா நகைகளையும் செய்வான்

5. துணிகளை வெளுக்கிறவன் வண்ணான் நாம் உடுக்கும் உடைகள் பலவிதமாய் அழுக்கு அடைகின்றன. அவைகளை வண்ணான் சுத்தி செய்வான் அழுக்கான உடைகளை நாம்உடுக்கக்

கூடாது; உடுத்தால் வியாதி வரும். ஆகையால் வண்ணான் நமக்கு அவசியம் வேண்டும்.

6. க்ஷவரம் செய்கிறவன் அம்பட்டன். நாம் அடிக்கடி க்ஷவரம் செய்துகொள்ள வேண்டும்; அல்லாவிட்டால் நம்முடைய ரூபம் விகாரமாய்த் தோன்றும். ஆகையால் அம்பட்டனும் நமக்கு அவசியம் வேண்டும்.

7. தச்சன், கருமான், தட்டான், வண்ணான், அம்பட்டன் இந்த ஐவரும் நமக்கு அவசியம் வேண்டிய வேலைக்காரர். அவர்களுக்குக் குடிமக்கள் என்று பெயர். குடிகளுக்கு அவசியம் வேண்டிய வேலைக்காரர் என்பது அதன் அர்த்தம். அவர்கள் இல்லாவிட்டால், நாம் ஜீவிப்பது கஷ்டம்.

8. வீடு கட்டுகிறவன் கொல்லத்துக்காரன். அவனுக்குக் கொற்றன் என்றும் பெயர் உண்டு. நாம் குடியிருக்கும் வீடுகளை அவன் கட்டுகிறான். வீட்டின் மரவேலையை மாத்திரம் தச்சன் செய்ய வேண்டும்.

9. துணி நெய்கிறவன் சேணியன். இவன் பஞ்சை நூலாக்குகிறான்; அந்த நூலுக்குப் பலவகையான சாயம் தோய்க்கிறான். அதைத்தறியில் இட்டுப் பலவிதமான துணிகளை நெய்கிறான்.

10. சமையல் செய்வதற்கு மண் பாண்டங்கள் நமக்கு வேண்டும். மண் பாண்டங்களைச் செய்பவன் குயவன். அவன் களிமண்ணைப் பிசைந்து, பலவகையான பாண்டங்களைச் செய்கிறான். சட்டி, பானை, குடம் முதலிய யாவும் அவனால் செய்யப்படுகின்றன.

11. பித்தளை, செம்பு இவைகளால் பாத்திரங்களைச் செய்பவன் கன்னான். இவன் செம்பு, தவலை, டம்பளர், குண்டான், அண்டா முதலிய பலவிதமான பாத்திரங்களைச் செய்கிறான்.

12. எண்ணெய் இறக்குகிறவன் வாணியன். இவன் எள்ளைச் செக்கில் இட்டு, ஆட்டி, எண்ணெய் இறக்குவான். காய்ந்த தேங்காய், நிலக்கடலை, ஆமணக்கு விதை என்பவைகளில் இருந்தும் எண்ணெய் இறக்குவது உண்டு.

13. மீன் பிடிப்பவன் செம்படவன். இவன் கடல், ஆறு, ஏரி, குளங்களிலும் வலை வீசி மீன் பிடிப்பான். அதை விற்று அவன் ஜீவனம் செய்வான்.

15. செருப்பு தைப்பவன் சக்கிலியன். நாம் நடக்கும்போது கல் உறுத்தாமலும், முள் தைக்காமலும் இருக்கும்படி, நமக்குச் செருப்பு வேண்டும். சக்கிலியன் பலவகையான

பாதரக்ஷைகளைச் செய்வான். அவன் முக்கிய மாய்த் தோலில் வேலை செய்வான்.

15. சுடு காட்டில் வேலை செய்பவன் வெட்டியான். இவன் இறந்து போனவர்களுடைய உடல்களைச் சுடுகிருன்.

16. இவ்விதமாய் மனிதர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலைச் செய்கிருர். முற்காலத்தில், செய்யும் தொழிலின் பிரகாரம், ஜாதி ஏற்பட்டது. ஒவ்வொரு ஜாதியாரும் தங்களுக்கு உரிய வேலைகளையே செய்து வந்தார். இப்பொழுது அவரவர் தங்களுக்கு இஷ்டமான தொழிலைச் செய்கின்ருர். வேலை செய்யாதவன். சோம்பேறி. ஆகையால், ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வேலையைச் செய்ய வேண்டும்.

---

## பதினேழாம் பாடம்.

### பூனை.

1. பூனை மிகவும் சாதுவான பிராணி. அதுவும் நாயைப்போலவே நமது வீடுகளில் வசிக்கிறது. அதன் தலை உருண்டையாய் இருக்கும்; கண்கள் மிகவும் கூர்மையானவை. பூனையின் கருவிழி பகலில் நீண்டு இருக்கும்; இரவில்

வட்டமாய்த் தோன்றும். பூனைக்கு இரவில் கண் நன்றாய்த் தெரியும்.

2. பூனையின் மூக்கு சப்பையாய் இருக்கும்; வாய் விசாலமானது. வாய்க்குள் பற்கள் உண்டு; அவை வெகு கூர்மையானவை. பூனையின் நாக்கு சொரசொரப்பாய் இருக்கும். அதன் மேல் உதட்டில் நீண்ட மீசை மயிர் உண்டு.



3. பூனையின் உடல் நீளமானது. உடலில் மிருதுவான மயிர் இருக்கும். அந்த மயிர் பஞ்சுபோல் மெதுவாய் இருக்கும். பூனை தன் உடலைத் தனது நாக்கினால் நக்கிச் சுத்தம் செய்துகொள்ளும்.

4. பூனைக்குக் காதுகள் நிமிர்ந்து இருக்கும். அவை மிகவும் கூர்மையானவை, சிறிய சத்தத்தையும் உடனே கேட்டு அறிந்துகொள்ளும்.

5. பூனைக்கு நான்கு கால்களும், ஒரு வாலும் உண்டு. கால்கள் குட்டையாய் இருக்

கும். பூனையின் பாதத்தில் ஐந்து நகங்கள் உண்டு. அந்த நகங்கள் மிகவும் கூர்மையானவை. பூனை தனக்கு இஷ்டமானபோது தன் நகங்களை நீட்டவும் சுருக்கவும் கூடும். பூனையின் வால் நீண்டு திரண்டு இருக்கும்; அதில் மயிர் அடர்ந்து இருக்கும்.

6. பூனை குட்டிபோட்டுப் பால்கொடுத்து வளர்க்கும். குட்டிகளுக்கு வேண்டிய ஆகாரத்தை அது சம்பாதித்துக் கொண்டுவந்து கொடுக்கும். பூனைக்குக் குட்டிகளிடத்தில் அதிக அன்பு உண்டு. அவைகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குத் தன் வாயினால் கௌவிக் கொண்டு போகும்.

7. பூனை பால், தயிர், சோறு, மாமிசம் முதலியவற்றைத் தின்னும். எலியைக் கண்டால் உடனே கொன்று தின்னும். மீன், பால் முதலியவற்றில் பூனைக்கு மிகவும் ஆசை. நாயைப்போலவே பூனையும், நீரை நாக்கினால் நக்கிக் குடிக்கும். காய்கறி பதார்த்தங்களில் பூனைக்கு விருப்பம் இல்லை. தான் வளரும் இடத்தில் தனக்கு இஷ்டமான பதார்த்தம் அகப்படாதுபோனால், வேறு இடத்துக்குச் சென்று தனக்கு இஷ்டமான பதார்த்தத்தைத் திருடித் தின்னும்.

8. பூனைக்கு விளையாட்டில் மிகவும் பிரியம்; சந்தோஷம் உண்டானால், அது 'கொர், கொர்'

என்று சத்தமிட்டுக்கொண்டு விளையாடும். பூனை கள் சிறு பிள்ளைகளோடு விளையாடுவது உண்டு. கோபம் வந்தால் அது சீறும். அப்பொழுது அதன் சமீபத்தில் நீ போகலாகாது; போனால் அது தன் நகங்களை நீட்டி உன்னைப் பீறி விடும்.

9. பூனை பகலில் தூங்கி, இரவில் இரை தேடப் போகும். பகற்காலத்தில் பூனை அடுப் பங்கரையில் படுத்திருப்பதை நீங்கள் காண லாம். பூனை சாதுவான பிராணியாய் இருந்தா லும், கோபம் வந்தால் மிகவும் மூர்க்கம் அடை யும். அதனால் பூனைக்குக் கோபம் மூட்டாதிருங் கள்.

---

## பதினெட்டாம் பாடம்.

### பூனையின் கதை.

1. ஒரு கிழப்பூனை ஆகாரம் சம்பாதிக்கச் சக்தி இல்லாமல், ஒரு மரத்தின் கீழ் உட்கார்ந்து இருந்தது. அதன் கண்கள் பார்வை குறைந்து போயின; உடம்பில் பலமும் இல்லை. ஆயினும், பசி அதை வாட்டியது. ஆகையால் அது 'என்னசெய்யலாம்?' என்று சிந்தித்துக்கொண்டு இருந்தது.

2. அப்பொழுது அதற்கு ஒரு யோசனை தோன்றிற்று. 'நான் சாமியார் போல் வேஷம்

போட்டுக்கொள்ளுவேன். அப்பொழுது எலிகள் என்னைச் சாமியாரென்று எண்ணி, என் சமீபத்தில் வரும்; உடனே அவைகளைப் பிடித்துத் தின்னுவேன், என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டது.

3. பிறகு, அது தன் கழுத்தில் உருத்திராக்ஷம் அணிந்துகொண்டது; தன்முன் ஒரு திருஓடு வைத்துக்கொண்டது. பிறகு கண்களை மூடிக்கொண்டு ஒரு மரத்தின் கீழ் உட்கார்ந்து இருந்தது.

4. அது அப்படி இருப்பதைச் சில எலிகள் கண்டன; சமீபத்தில் சென்றன. பூனை அவைகளுக்கு ஒரு கெடுதியும் செய்யவில்லை. அப்பொழுது "ஒரு எலி, ஓ! பூனையே எலிகளைக் கொன்று தின்பது உன் ஜாதித் தொழில் அல்லவா? அப்படியிருக்க நீ ஏன் சும்மா இருக்கிறாய்?" என்றது. பூனை கொஞ்சம் கண்ணைத் திறந்து, "நீ சொல்வது மெய்தான். நான் முன்னே பல எலிகளைக் கொன்று தின்றேன். இப்பொழுது, அது கொடிய பாவம் என்று எனக்குத் தெரிகிறது. ஆகையால் அந்தப் பாவத்தொழிலை விட்டுப் புண்ணியத்தைத் தேட எண்ணி, கடவுளைத் தியானம் செய்கிறேன்," என்றது.

5. அதைக்கேட்ட எலி, "மிகச் சந்தோஷம். கடவுளைத் தியானம் செய்யாது இருந்த

பலன் என்ன? அதனால், நானும் என் இனத்தாரும் உம்மோடுகூட இருந்து கடவுளைத் தியானம் செய்கிறோம்,'' என்று சொல்லிற்று.

6. பிறகு, அந்த எலிபோய், மற்ற எலிகளையும் அழைத்துக்கொண்டு வந்தது. எலிகள் எல்லாம் பூனையைச்சுற்றி உட்கார்ந்து, தம் கண்களை மூடிக்கொண்டன. பூனையின் வஞ்ச எண்ணத்தை எலிகள் தெரிந்துகொள்ளவில்லை.

7. அந்தத் திருட்டுப்பூனை சமயம் பார்த்துக்கொண்டு இருந்து எலிகள்மேல் பாய்ந்து அவைகளைக் கொல்ல ஆரம்பித்தது. அநேக எலிகள் அதற்கு இரையாயின. தப்பிப் பிழைத்த எலிகள் வளைகளில் போய்ச் சேர்நதன.

8. பூனை தான் கொன்ற எலிகளைத் தின்றது. மறுபடியும், எலிகள் தன்னிடத்தில் வருமென்று காத்து இருந்தது. எலிகள் திரும்பி அவ்விடம் வரவில்லை. ஆகையால் பூனை வேறு இடத்துக்குச் சென்றது. சூடுண்ட பூனை அடுப்பங்கரையை நாடுமா? ஆகையால் வேஷத்தினால் நாம் ஏமாந்து போகக்கூடாது.

## பத்தொன்பதாம் பாடம்.

### காற்றாடியும் சிறுவனும்.

1. பிள்ளைகளே! காற்றாடி என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? ஆம், தெரியும் என்று நினைக்கிறேன். நடுத்தெருவில் காற்றாடி பறக்கவிட்டுக் கெடுதி அடைந்த ஒரு சிறுவன் கதையைக் கேளுங்கள்.

2. ஒரு நாள் ஒரு சிறுவன் தெருவில் காற்றாடி ஒன்றைப் பறக்க விட்டுக்கொண்டிருந்தான். அதைக்கண்ட வேறு சிறுவர்களும் அங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களும் தங்கள் தங்கள் காற்றாடிகளைப் பறக்க விட்டார்கள்.

3. இவ்விதமாய் அவர்கள் காற்றாடிகளைப் பறக்க விட்டுக்கொண்டு, நடுத்தெருவில் நின்றார்கள். அவர்கள் காற்றாடி பறப்பதையே பார்த்துக்கொண்டு இருந்தார்கள்; வேறு ஒன்றையும் அவர்கள் கவனிக்கவில்லை.

4. அச் சமயத்தில் ஒரு குதிரை வண்டி வேகமாய் வந்தது. வண்டிக்காரன் ஹை ஹை என்று குரல் கொடுத்துக்கொண்டே வந்தான். சிறுவர் அதைக் கேட்கவில்லை. வண்டி, சிறுவர்களில் ஒருவனைக் கீழே தள்ளிவிட்டது. சக்கரங்கள் அவன்மேல் ஏறின.

5. உடனே சிறுவர்கள் கூச்சல் இட்டார்கள். தெருவில் போய்க்கொண்டு இருந்த ஜனங்கள் எல்லாரும் கூடினர். தாணுக்காரனும்

ஓடி வந்தான்; அவன் அச்சிறுவனை வண்டியில் ஏற்றி, வைத்திய சாலைக்குக் கொண்டு




போனான். மேலும், அவன் வண்டி ஓட்டினவனைப் பிடித்துக்கொண்டான்.

6. வைத்தியர் சிறுவனைப் பார்த்தார். பையன் வலி தாளமாட்டாது 'ஓ' என்று அலறினான்; பிறகு மூர்ச்சை அடைந்தான். வைத்தியர் அவனுக்குத் தக்க சிகிச்சை செய்தார். ஆயினும் பையன் சீக்கிரத்தில் இறந்து போனான். அவனுடைய தாயும் தந்தையும் மிகத் துன்பப்பட்டார்கள்.

7. தாணுக்காரன் வண்டி ஓட்டினவனை நியாயாதிபதி முன் நிறுத்தினான். நியாயாதிபதி, அவனை விசாரணை செய்து, தண்டித்தார். அதனால் என்ன பயன்?; இறந்த சிறுவன் மீண்டும் வருவானோ?

8. இந்தப் பையன் தெருவில் காற்றாடி விட்டதனால் இவ்விதமான கஷ்டம் நேரிட்டது. சிறுவர்கள் தெருவில் காற்றாடி விடுவதும், கோலி ஆடுவதும் உண்டு. இது மிகவும் கெட்ட பழக்கம். சிறுவர்கள் விளையாட வேண்டுமானால், மைதானமான இடத்திலாவது, தங்கள் வீட்டுக் கொல்லையிலாவது ஆடவேண்டும். ஒரு போதும் தெருவில் ஆடல் ஆகாது.

---

## இருபதாம் பாடம்.

### காற்று.

1. காற்று நம்மைச் சுற்றி இருக்கும் வஸ்து. அது இல்லாத இடம் இல்லை. அதை ஆகாயம் என்றும் சொல்வது உண்டு. காற்று நமது கண்ணுக்குத் தெரியாது; ஆனாலும் அது நமது உடலில் படுவதால் நமக்குத் தெரிகிறது. மரம், செடிகளின் இலைகள் காற்றினால் தான் அசைகின்றன.

2. காற்று, நாம் உயிரோடு இருப்பதற்கு மிகவும் அவசியமானது. ஆகாரம் இல்லாமல் நாம் பல நாள் உயிரோடு இருக்கலாம். காற்று இல்லாவிட்டால், நாம் சில நிமிஷங்களுக்குள் இறந்து போவோம். புல், பூண்டுகளுக்கும், மற்றப் பிராணிகளுக்கும் காற்று வேண்டும். காற்று இல்லாவிட்டால் அவைகளும் அழிந்துபோம்.

3. காற்று, நம்மைச் சுற்றிலும், நமக்கு மேலும் கீழும் எங்கும், பரவி இருக்கிறது. வெறுமையான இடம் இருந்தால் உடனே காற்று புகுந்து அதை நிரப்பும். வெறுமை என்று நாம் நினைக்கிற இடத்தில் காற்று நிறைந்தே இருக்கிறது. காற்று அசையாது இருக்கும்போது அதை 'வாயு' என்கிறோம்; அசைந்து வீசும்போது, அதைக் காற்று என்கிறோம்.

4. நாம் அடிக்கடி காற்றை உள்ளே வாங்கிக்கொண்டும், வெளியே விட்டுக்கொண்டும் இருக்கிறோம். இப்படிச் செய்வதற்குச் சுவாசித்தல் என்று பெயர். நாம் உட்கொள்ளும் காற்று சரீரத்தினுள் புகுந்து, இரத்தத்தைச் சுத்தி செய்கிறது. நாம் வெளியே விடும் காற்று இரத்தத்திலுள்ள அழுக்குகளை யெல்லாம் வெளியே கொண்டு வருகிறது. அதனால் அது விஷத்தன்மை உள்ளது. ஆதலால், அக் காற்றை உட்கொள்ளுவது மிகவும் கெட்டது.

5. நாம் சுத்தமான காற்றை உட்கொள்ள வேண்டும்; அசுத்தமான காற்றை உட்கொள்ளல் ஆகாது. காற்று பலவிதமாய் அசுத்தம் அடைகிறது. சேறு, சாக்கடை, குப்பை முதலிய இடங்களிலிருந்து வரும் காற்று அசுத்தமானது. அதை உட்கொண்டால் வியாதி உண்டாகும்.

6. ஜனங்கள் நிறைந்திருக்கும் அறைகளிலுள்ள காற்றும் அசுத்தமானது. அவர்கள் வெளியே விட்ட விஷத்தன்மையுள்ள காற்று, அந்த அறையில் நிரம்பி இருக்கும். அதை உட்கொண்டால் மரணம் உண்டாகும். அசுத்தமான காற்றை உட்கொள்ளுபவர்களுக்குப் பெரும்பாலும் உடனே கெடுதி நேரிடுவது இல்லை. ஆயினும், அவர்கள் நாளுக்கு நாள்

வியாதி அடைந்து, பலம் குறைந்து, இறந்து போவார்கள். ஆகையால், அசுத்தமான காற்றை உட்கொள்ளல் ஆகாது.

7. நாம் வசிக்கும் வீடுகளில் சுத்தமான காற்று பிரவேசிக்கும்படி செய்ய வேண்டும். படுக்கை அறைகளின் கதவுகளையும் ஜன்னல்களையும் நன்றாய்த் திறந்து வைக்கவேண்டும். காற்று அசுத்தம் அடையாதபடி, வீட்டைச் சுத்தியாய் வைக்க வேண்டும்.

8. தரையிலிருந்து கடல் முகமாக வீசுகிற காற்றுக்குத் தரைக்காற்று என்று பெயர். அது சுகத்துக்கு ஏற்றது. நன்றாய் வீசினால், அது கப்பலின் பாய்களைத் தாக்கி, அவைகளை ஓடச் செய்யும். காற்று பலமாய் வீசினால், அதற்குப் புயல் அல்லது பெருங்காற்று என்று பெயர். சுற்றிச்சுற்றி வீசுகிற காற்று சுழல் காற்று எனப்படும்.

9. வடக்குப் பக்கத்திலிருந்து வரும் காற்று வாடை என்றும், கிழக்கிலிருந்து வரும் காற்று கொண்டல் என்றும், மேற்கிலிருந்து வரும் காற்று கோடை என்றும், தெற்கிலிருந்து வரும் காற்று தென்றல் என்றும்; சொல்லப்படும். தென்றல் உடம்புக்கு இன்பம் தரும்.

## இருபத்தொன்றும் பாடம்.

### தண்ணீர்.

1. காற்றைப்போலவே தண்ணீரும் நமக்கு அவசியமான வஸ்து. நாம் ஆகாரம் இல்லாமல் பல நாள் இருக்கலாம். தண்ணீர் இல்லாமல் ஒரு நாள்கூட இருக்க முடியாது எல்லாப் பிராணிகளுக்கும் தண்ணீர் வேண்டும். தண்ணீர் இல்லாவிட்டால் அவை இறந்து போம். புல், பூண்டு, மரம், செடிகள் கூடத் தண்ணீர் இல்லாவிட்டால், வாடி உலர்ந்துபோம்.

2. தண்ணீர் ஆறு, ஏரி, குளம், கிணறு முதலிய இடங்களில் அகப்படும். இவைகளுக்கு எங்கிருந்து நீர் வருகிறது? மழை பெய்வதனுல் வருகிறது.

3. நீர், சூரியனுடைய வெப்பத்தினுல் ஆவியாக மாறி, மழையாகிறது. மழைநீர் கூடிய வரையில் சுத்தமானது. அது பூமியில் விழும்போது, ஆகாயத்திலுள்ள தூசு தும்புகளோடு கலக்கிறது. பூமியில் விழுந்தபின், பலவிதமான அழுக்குகள், மண், தூசு முதலியவைகள் அந்த நீரோடு சேருகிறது. ஆகையால் சுத்தமாய் விழுகிற மழைநீர் அசுத்தம் அடைகிறது.

4. இவ்வாறு, மழைநீர் அசுத்த மடைந்து, ஆறு, ஏரி, குளம், குட்டைகளில் சேருகிறது. ஆகையால் அவற்றில் உள்ள நீர் சுத்தமானதல்ல. மழை பெய்யும்போது, வெளி இடத்தில் ஒரு வாய் அகன்ற பாத்திரத்தை வைத்துப் பிடித்த மழைநீர் சுத்தமாய் இருக்கும்.

5. ஆழமான கிணற்று நீரும் சுத்தமானது. அதற்கு ஊற்று நீர் என்று பெயர். சுத்த நீரையே நாம் குடித்தல் வேண்டும். ஸ்நானம் செய்வதற்கும் சுத்த நீரையே உபயோகிக்க வேண்டும். அசுத்தமான நீரைக் குடித்தால் வியாதி உடனே உண்டாகும்.

6. தண்ணீர் தாகத்தைத் தணிக்கிறது. அதில் நாம் ஸ்நானம் செய்கிறோம்; துணிகளைத் துவைக்கிறோம். அது மரம், செடி, கொடிகளுக்கு முக்கியமான ஆதாரமாய் இருக்கிறது. ஆகையால் கடவுள், தண்ணீர் ஏராளமாய் அகப்படும்படி செய்திருக்கிறார்.

7. சுத்தமான நீருக்கு நிறமுமில்லை; மணமுமில்லை; உருசியுமில்லை. அது பளிங்கு போலக் களங்கம் இல்லாது தோன்றும். அது அகப்படுவது அரிது. ஆகையால் எந்த நீராக இருந்தாலும், அதை நன்றாய்க் காய்ச்சி வடிகட்டிச் சாப்பிட வேண்டும். அசுத்தமான நீர் பலவிதமான நோய்களுக்குக் காரணமாகும்.

8. சில குளங்களிலும், கிணறுகளிலும் உள்ள தண்ணீர், பச்சை நிறமாய் இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? அதில் பாசி கலந்து இருக்கிறது. அதைக் கையில் எடுத்து மோந்து பார்த்தால், கெட்ட வாசனை வீசும். அது மிகவும் அசுத்தமானது. அதில் ஸ்நானம் செய்யவும் கூடாது.

9. தண்ணீர், பயிர்களுக்கு மிகவும் அவசியமானது. ஆறு, ஏரி முதலியவைகளில் இருந்து ஏராளமான நீரைப் பயிர்நிலங்களுக்குப் பாய்ச்சுகிறார்கள். வீடுகளில் தீ பற்றிக்கொண்டால், அதைத் தண்ணீரால் அவிக்கலாம்.

10. பிள்ளைகளே! நீங்கள் முக்கியமாய்க் கீழ்க்கண்ட விஷயங்களைக் கவனிக்கவேண்டும்:—

சுத்தமான நீரையே பானம் செய்ய வேண்டும்.

சுத்தமான நீர் அகப்படுவது அருமை. ஆதலால், எந்த நீரையும் காய்ச்சி வடிகட்டியே சாப்பிட வேண்டும்.

## இருபத்திரண்டாம் பாடம்.

### ஆறுகளும் குளங்களும்.

1. பிள்ளைகளே! மழை பெய்யும்போது கவனித்துப் பாருங்கள். என்ன நடக்கிறது? மழை, முதலில் தூற ஆரம்பிக்கிறது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் உரத்தப் பெய்கிறது. வீட்டுக் கூரைகளில் விழும் ஜலம் தெருவுக்குப் போகிறது. மேடான இடங்களில் விழும் ஜலம் சிறு கால்வாய்களாய்ப் பள்ளத்தை நாடிச் செல்லுகிறது. இவ்விதமாய்ப் பல சிறு கால் வாய்கள் ஒன்றாய்ச் சேருகின்றன. தெருவில் வெள்ளம் புரண்டு, பெரிய கால்வாய்போல் ஓடு கிறது.

2. இவ்விதமான பல கால்வாய்கள் ஒன் றாய்ச் சேருகின்றன. மலைகளிலும் மைதான மான இடங்களிலும் மழை பெய்கிறது. அந்த நீரும் சிறு கால்வாய்களாய் ஓடுகிறது. இவை யெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து பல சிற்றாறுகள் ஆகின்றன. பல சிற்றாறுகள் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய ஆறு ஆகிறது.

3. ஆற்றில் வெள்ளம் நிறைந்து ஓடும். வெள்ளம் ஓடும்போது தரையைக் கரைத்துக் கொண்டே போகும். ஆகையால் தண்ணீர் செந்நிறமாக இருக்கும். ஆறு ஓடும்போது, பல மரங்களையும், செடிகளையும் அடித்துக்

கொண்டு போகும். ஆற்றில் நிறைய வெள்ளம் புரண்டு ஓடுவது வெகு அழகாய் இருக்கும்.

4. ஆறு ஓடும்போது பள்ளமான இடங்களை நிரப்புகிறது. நிரப்பின இடம் சிறியதாய் இருந்தால், அதற்குக் குளம் என்று பெயர். பெரிதாய் இருந்தால் ஏரி எனப்படும். நாட்டில் பெய்யும் மழையினாலும் குளங்கள், ஏரிகள் நிரம்புவதுண்டு.

5. ஆற்றிலுள்ள புது வெள்ளம் மிகவும் அசுத்தமானது. ஜலம் தெளிந்தால், கூடிய வரையில் சுத்தமாய் இருக்கும். ஆற்று நீரைக் கால்வாய்கள் வழியாய்ப் பயிர் நிலங்களுக்குப் பாய்ச்சுவார்கள். ஸ்நான பானத்துக்கும் ஆற்று நீரை உபயோகிப்பார்கள். ஆறுகள் அதிகமான மழை நீரை வடித்துக்கொண்டுபோகின்றன. அவை இல்லாவிட்டால், மழைநீர் நாட்டில் தங்கி, உயிர்களையும் பயிர்களையும் அழிக்கும். மேலும், ஆறுகள், நீர் குறைவாய் இருக்கிற இடங்களுக்கு நீரைக் கொண்டு போகின்றன.

6. மலையை அடுத்த இடங்களில் மழை விசேஷமாய்ப் பெய்யும். ஆகையால் ஆறுகள் பெரும்பாலும் மலைகளில் உற்பத்தி ஆகின்றன. அங்கே முதலில், ஆறு, பல சிறு அருவிகளாகத் தோன்றும். அவை ஒன்று சேர்ந்து, பல சிற்

ருறுகள் ஆகும். சிற்ருறுகளுக்கு உபநதிகள் என்று பெயர். அவை ஒன்று சேர்ந்து பெரிய ஆருகும். பெரிய ஆறுகள், பல நாடுகளுக்கு உள்ளாகச் சென்று, கடைசியில் சமுத்திரத்தில் விழுகின்றன.

7. ஆறுகள் போகும்போது சிறு நதிகளாகப் பிரிவதும் உண்டு. அவைகளுக்குக் கிளை நதிகள் என்று பெயர். ஆறு இல்லாத ஊருக்கு அழகே இல்லை, என்பார்கள்.

8. குளங்களில் உள்ள நீர் நிலையானது, அது ஆற்று நீரைப்போல ஓடிக்கொண்டு இருப்பதில்லை. ஆகையால் அது சீக்கிரத்தில் அழுக்காகிறது. குளங்கள் இரண்டு வகைப் படும். ஒன்று, கோயில்களை அடுத்துள்ள குளங் கள். இவை நான்கு புறமும் நன்ருய்க் கட்டப் பட்டு இருக்கும். இறங்குவதற்கு அழகான படிகள் உண்டு. மற்றது, நாட்டிலுள்ள சிறு நீர் நிலைகள். இவைகளைச் சிறு ஏரிகள் என்றும் சொல்லலாம். இவைகளில் இருந்தும் பயிர் ளுக்கு நீர்ப்பாய்ச்சுவது உண்டு. இவைகளில் உள்ள நீர் ஸ்நான பானத்துக்கு ஏற்றதல்ல.

## இருபத்து மூன்றும் பாடம்.

### சூரியன்.

1. பிள்ளைகளே! அதிகாலையில் நமக்கு ஒரு வெளிச்சம் தோன்றுகிறது அல்லவா? அதைத்தான் நாம் சூரியன் என்கிறோம். சூரியன் ஒரு பெரிய அக்கினி உருண்டை. அதை நேராய்ப் பார்க்க நம்மால் முடியாது; பார்த்தால் நமது கண்கள் கூசும்.



2. சூரியனிடத்தில் இருந்து நமக்கு வெளிச்சமும் உஷ்ணமும் வருகிறது. அதன் பிரகாசத்துக்குத் தக்கபடி உஷ்ணமும் உண்டு. சூரியன் இல்லாவிட்டால், இந்த உலகத்தை இருள் மூடிக்கொள்ளும்; பூமியில் வெளிச்சம் என்பது இராது; ஒரு பிராணியும் பூமியில் வாசம் செய்ய முடியாது; மழை பெய்யாது; புல், பூண்டு, மரம், செடி ஒன்றும் முளைக்க

மாட்டா. ஆகையால், சூரியன் எல்லாப்பிராணிகளுக்கும் ஆதாரமாய் இருக்கிறது.

3. சூரியன் கிழக்கே தோன்றி, மேற்கில் மறைவது போலத் தெரிகிறது. சூரியன் பிரகாசிக்கும் காலத்துக்குப் பகல் என்று பெயர். சூரியனுடைய வெளிச்சம் வெயில் எனப்படும். அது மிகவும் உஷ்ணமானது. மேகம் உள்ள காலங்களில் சூரியனுடைய ஒளி குறையும்.

4. சூரியன் நிலையாய் நிற்கிறது. பூமி, சூரியனைக் கிழக்கில் இருந்து மேற்கு முகமாகச் சுற்றி வருகிறது. பூமி சுற்றுவதால் சூரியன் கிழக்கில் உதித்து, மேற்கே செல்வதாகத் தோன்றுகிறது. சூரியன் தோன்றும் காலம் உதயம் எனப்படும்; மறையும் காலம் அஸ்தமனம் எனப்படும்.

5. சூரியன் தன் வெளிச்சத்தை வேறு பல உருண்டைகளுக்கும் கொடுக்கிறது. அவைகளுக்குக் கிரகங்கள் என்று பெயர். அவை சூரியனைச் சுற்றி வருகின்றன. அவற்றுள் நாம் வசிக்கும் பூமி ஒன்று.

6. சூரியன் மிகவும் உஷ்ணமான அக்கினி உருண்டை. மிக உக்கிரமான நெருப்பின் உஷ்ணமும் அதற்கு இணையாகாது. சூரியனைச் சுற்றியுள்ள வாயுக்கள் பல ஆயிரம் மைல் தூரத்துக்கு உஷ்ணத்தை வீசிக்கொண்டே இருக்கின்

றன. நாம் சூரியனுக்கு நெடுந் தூரத்தில் இருக்கிறோம். ஆகையால் தான் அதன் உஷ்ணம் பொறுக்கக் கூடியதாய் இருக்கிறது.

7. சூரியன் தண்ணீரை ஆவியாக மாற்றுகிறது; அந்த ஆவி மழையாகப் பெய்கிறது. ஆகையால், மழைக்குச் சூரியனே காரணம். சூரியன் இல்லாவிட்டால் மழை பெய்யாது; தினங்கள், மாதங்கள், வருஷங்களைக் கணக்கிட முடியாது.

8. நாட்கள் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என ஏழு. ஒரு பகலும் ஒரு இரவும் சேர்ந்தது ஒரு நாள். ஒரு நாளில் இருபத்து நான்கு மணிகள் உண்டு. ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம். முப்பது நாட்கள் கொண்டது ஒரு மாதம். பன்னிரண்டு மாதங்கள் கொண்டது ஒரு வருஷம்.

தமிழ் மாதங்கள் பன்னிரண்டு:—சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி.

ஆங்கிலேய மாதங்கள் பன்னிரண்டு:—ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு, ஏபிரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டெம்பர், அக்டோபர், நவம்பர், டிசெம்பர்.

9. சூரியன் ஒரு புருஷனென்றும், அவன் ஏழு குதிரைகள் பூட்டிய ஒரு இரதத்தில் ஏறிச் செல்கிறான் என்றும், நமது புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இது இக்கால சாஸ்திரங்களுக்கு ஒத்ததல்ல.

---

## இருபத்து நான்காம் பாடம்

### திசைகள்.

1. இதோ பார்! ஒரு பையன் இரண்டு




கைகளையும் நீட்டிக்கொண்டு நிற்கிறான். அவன்

சூரியன் உதிக்கும் திசையைப் பார்த்துக் கொண்டு நிற்கிறான். சூரியன் உதிக்கும் திசை கிழக்கு; அவனுக்குப் பின்புறம் மேற்கு. அது தான் சூரியன் அஸ்தமிக்கும் திசை.

2. ஸபயனுடைய வலதுகைப் பக்கம் தெற்கு; இடதுகைப் பக்கம் வடக்கு. ஆகை யால் திசைகள் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என நான்கு என்று தெரிகிறது.

3. வடக்குக்கும் கிழக்குக்கும் இடையில் இருப்பது வடகிழக்கு; வடக்குக்கும் மேற்குக் கும் இடையில் இருப்பது வடமேற்கு; தெற்குக் கும் கிழக்குக்கும் இடையில் இருப்பது தென் கிழக்கு; தெற்குக்கும் மேற்குக்கும் இடையில் இருப்பது தென்மேற்கு. ஆகையால் திசைகள் எட்டு என்று சொல்வதும் உண்டு.

4. இந்த எட்டுத் திக்குகளிலும் எட்டுப் பேர்கள் இருந்து, காவல் புரிகிறார்கள் என்பது இந்துக்களுடைய கொள்கை. அப்படிக் காக்கிற வருக்கு இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்று பெயர். இவர்களை அஷ்ட திக்குப் பாலகர்கள் என்பார்கள்.

## இருபத்தைந்தாம் பாடம்.

### எறும்பு.

1. எறும்பு மிகவும் சிறிய பிராணி. அது ஊர்ந்து செல்லுகிற ஈ, தேனீ முதலிய பிராணிகளின் வகுப்பைச் சேர்ந்தது. அது பெரும்



பாலும் உஷ்ணமான தேசங்களில் சஞ்சரிக்கிறது. கற்பாறையின் கீழும், மரப்பொந்துகளிலும், மேடான நிலங்களிலும் புற்று வைத்து வாசம் செய்யும். ஒருவகையான சிவந்த எறும்பு மரஇலைகளை ஒன்று சேர்த்து, அதற்குள் வசிக்கும். அதற்கு முசிறு என்று பெயர்.

2. எறும்புகள் களிமண்ணை மேடாகக் குவித்து, அதில் பல புற்றுகளை அமைத்துக் கொள்ளும். மழை நீர் உள்ளே செல்லாதபடி

அவை இப்படிச் செய்து கொள்ளுகின்றன. எறும்பின் புற்றுகள் பூமிக்குள் வெகு ஆழமாகச் செல்லும். ஒரு நகரத்தில் அநேக வீடுகளும் வீதிகளும் இருக்கின்றன அல்லவா? அது போல அந்தப் புற்றின் உள்ளேயும் பல பாதைகளும், எறும்புகள் வசிப்பதற்குப் பல சிறு அறைகளும் இருக்கும். எறும்புப் புற்றுகள் தரையில் சிறு மலைகள் இருப்பது போலத் தோன்றும்.

3. எறும்புகளில் பலவகை உண்டு. ஒழுக்கெறும்பு, கொள்ளி எறும்பு, கட்டெறும்பு, சிற்றெறும்பு, முசிறு முதலியவை அவற்றுள் முக்கியமானவை. அவை கூட்டம் கூட்டமாக வசிக்கும். அவை வெளியே போகும்போது, ஒன்றன்பின் ஒன்றாய் வரிசையாகச் செல்லும். அவை அப்படிச் செல்வது வெகு அழகாய் இருக்கும்.

4. ஒழுக்கெறும்பு ஒழுங்காய்ச் செல்வதில் மிக்க திறமை உள்ளது. பல்லாயிரம் ஒழுக்கெறும்புகள் ஒன்று சேர்ந்து சாரை சாரையாய்ச் செல்வது வெகு விநோதமாய் இருக்கும். அவை சில சமயங்களில் இரண்டு அல்லது மூன்று மைல் தூரம் வரையிலும் நீண்ட வரிசையாய்ச் செல்லும். அவை செல்லும் வழியின் குறுக்கே ஒரு கட்டையை வைத்தால், அவை அந்த வழியை விட்டு வேறுவழியாகச் செல்லும். அவை செல்லும் வரிசையைப் பிரித்துவிட்டால்;

பிரிந்த எறும்புகள் வேறுவழியாகச் சென்று முன்செல்லும் எறும்புகளோடு சேர்ந்துகொள்ளும்.

5. எறும்புகள் பல நிறங்கள் உடையவை. சில ஜாதி எறும்புகள் கறுப்பாய் இருக்கும்; சில சிவந்த நிறம் உடையவை; சில நீல நிறம் பொருந்தி இருக்கும். சில வெண்மையாய் இருக்கும். இவை மிகவும் சிறியவை. இவைகளைத் தான் செல்லு என்று சொல்வது. அஜாக்கிரதையாய் நாம் இருந்தால், இவை காகிதம், புஸ்தகம், மரத்தால் செய்யப்பட்ட பெட்டி முதலியவைகளை அரித்து நாசமாக்கும்.

6. எறும்பின் உடல் தலை, மார்பு, வயிறு என மூன்று பிரிவுகளை உடையது. தலையின் முன்புறத்தில் இரண்டு தும்பிகள் உண்டு. அவைகளுக்குப் பின்னால் இரண்டு கண்கள் இருக்கின்றன. அவை குவிந்து வட்டமாய் இருக்கும். சில எறும்புகளுக்கு மூன்று கண்கள் உண்டு. கண் இல்லாத எறும்புகளும் உண்டு என்று சொல்லுகிறார்கள்.

7. எறும்புகள் அரிசி, நொய், சிறு தானியங்கள், பழங்கள், இறந்துபோன பிராணிகள் முதலியவற்றைத் தின்று ஜீவிக்கும். தித்திப்பான பண்டங்களில் அவைகளுக்கு வெகுஆசை. அப்பண்டங்களை எங்கே மறைத்து வைத்தாலும் எறும்புகள் வாசனையால் அவற்றைக் கண்டு

பிடிக்கும். ஆகாரம் இருக்கும் இடத்தை ஒரு எறும்பு தெரிந்துகொண்டால், உடனே அது போய், தன் இனத்தை எல்லாம் அழைத்து வரும்.

8. எறும்பு மிக்க சுறுசுறுப்புள்ள பிராணி. அது எப்பொழுதும் வேலை செய்துகொண்டே இருக்கும்; ஒரு நிமிஷமும் சும்மா இருப்பதில்லை. பிள்ளைகளே! அதுபோல நீங்களும் சுறுசுறுப்பாய்ப் படிக்கவேண்டும்; வேலை செய்ய வேண்டும். வேலை செய்யாதவன் சோம்பேறி; அவன் எப்பொழுதும் தரித்திரத்தால் துன்பமே அடைவான்.

---

## இருபத்தாறும் பாடம்.

### எறும்பின் கதை.

1. ஒரு நாள் எலி ஒன்று ஒரு மரத்தின் கீழ் செத்துக் கிடந்தது. அப்பொழுது ஒரு எறும்பு அவ் வழியாய் வந்தது. இறந்த எலியில் இருந்து கெட்ட வாசனை வீசிக்கொண்டிருந்தது. அங்கு வந்த எறும்பு வாசனையினால் எலி இருக்கும் இடத்தைத் தெரிந்துகொண்டது. உடனே எலியண்டை சென்றது. ‘ஆகா! நமக்கு நல்ல இரை அகப்பட்டது” என்று மகிழ்ச்சி அடைந்தது.

TB 031C27 N33

2. அந்த எலியைத் தன் வளைக்கு இழுத்துக்கொண்டு போக அது தீர்மானித்தது. ஆகையால் அது எலியைக் கடித்து இழுக்கப் பார்த்தது. அதனால் அதை இழுக்கச் சாத்தியப் படவில்லை; எவ்வளவோ பிரயாசப்பட்டது; பலன் இல்லாமல் போயிற்று. பாவம்! சிற்றெறும்பு! அது என்ன செய்யும்! சிறிது நேரம் சும்மா இருந்தது.

3. அதற்கு ஒரு உபாயம் தோன்றிற்று. உடனே அது அவ்விடத்தை விட்டுப் போயிற்று. சிறிது நேரம் சென்றபின் வேறு எறும்புகளை அழைத்துக்கொண்டு மீண்டும் அங்கு வந்தது. எறும்புகள் எல்லாம் சேர்ந்து, எலியைக் கடித்து இழுக்கப் பார்த்தன; அவைகளால் ஆகவில்லை. ஆகையால் அவைகளெல்லாம் போய்விட்டன.

4. பிறகு கொஞ்சநேரம் பொறுத்துப் பல ஆயிரம் எறும்புகள் அங்கு வந்தன. அவையெல்லாம் ஒன்று சேர்ந்து எலியைக் கடித்து இழுத்தன. எலி நகரத் தலைப்பட்டது. அவைகள் அந்த எலியை மெதுவாய் இழுத்துக்கொண்டு வளைக்குப் போயின; பிறகு எறும்புகள் எல்லாம் சேர்ந்து அந்த எலியைத் தின்றன.

5. பிள்ளைகளே! இந்தப் பாடத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொள்வது என்ன? ஒரு எறும்பினால் ஆகாத காரியம் பல எறும்புகளினால்

220420

ஆயிற்று. அதற்குக் காரணம் என்ன? அவை கள் எல்லாம் ஒன்ருய்ச் சேர்ந்தது தான். இவ் விதமாய்ப் பலர் ஒன்று சேர்வதற்கு ஒற்றுமை என்று பெயர். இவ்விதமான ஒற்றுமை உங்க ளிடத்திலும் இருக்கவேண்டும்.

6. ஒற்றுமை சிறு வயதிலேயே உங்களிடத் தில் உண்டாகவேண்டும். ஒற்றுமை இப் பொழுதே உங்களிடத்தில் உண்டானல் நீங்கள் பெரியவர்கள் ஆகும்போது பெரிய காரியங் களைச் செய்யலாம். பலர் ஒன்று சேர்ந்து வர்த் தகம் செய்யலாம்; அல்லது வேறு தொழில்களை யும் நடத்தலாம். இவ்விதமாய் நீங்கள் சீரும் சிறப்பும் அடையலாம். "ஒற்றுமை பலம் தரும்" என்பது பழமொழி. இதை ஒரு போதும் மறக்கவேண்டாம்.

---

## இருபத்தேழாம் பாடம்.

### எறும்புப் பாட்டு.

1. சிற்றெறும்பே! சிற்றெறும்பே!
சிறப்பான சிற்றெறும்பே!
உற்ற சுறு சுறுப்புனக்கு
ஒரு போதும் ஒழியாதே.

2. காலையினில் எழுந்தவுடன்
கடுகவிரைந் தோடுவையே

மாலைதனில் வளை புகுமுன்
வயிறார உண்டிடுவாய்.

3. உன்னைப்போல் உழைப்பதற்கு
ஒருவருண்டோ இப் புவியில்
பின்னையுனைப் பின்பற்றப்
பேதையர்க்குத் தடையென்னோ?

4. பலரொன்றாய்ச் சேர்ந்ததையும்
பாங்காகச் செய்திடுவீர்
புலம் பிடித்து இரைதனை நீர்
புகுந்துகொண்டு வந்திடுவீர்.

5. ஒற்றுமைதான் இன்னதென்று
உலகினர்க்கு ஓதுவிக்கும்
வித்தகர்தாம் நீவிரென
விளம்பிடுவார் அறிஞர்கள் காண்.

6. நீவிர் செல்லும் ஒழுங்கதனை
நினைவிலவர் பதித்து நிதம்
சீவியத்தை நடத்தி வந்தால்
சிறப்பாக வாழ்ந்திடலாம்.

7. புத்தியில்லாச் சிறுவர்களே!
போயெறும்பைப் பாத்திடுங்கள்
சித்திபெற வழியுண்டு
சிறப்படைவீர் இது திண்ணம்.

## இருபத்தெட்டாம் பாடம்.

### ஏர் உழுதல்.

1. நாம் உணவு இல்லாமல் உயிரோடு இருக்க முடியாது. உணவைச் சம்பாதிக்க நாம் பல வேலைகளைச் செய்கிறோம். அந்த வேலைகளில் மிகவும் மேலானது பயிரிடும் தொழில். பயிரிடும் தொழில் என்றால் என்ன? நெல்,



சாமை, கேழ்வரகு முதலிய தானியங்களை நிலத்தில் விதைத்து அவை பலன் கொடுக்கும் வரையில் வேலை செய்வது. முதலில் நாம் என்ன செய்யவேண்டும்? நிலத்தைப் பண்படுத்தவேண்டும். நிலத்தைப் பண்படுத்த வேண்டுமானால்

அதை உழவேண்டும். உழுவதற்கு அவசியமான கருவி கலப்பை.

2. கலப்பையில் மேழி, உழுபடை, ஏர்க்கால், நுகம் என நான்கு பாகங்கள் உண்டு. மேழி என்பது கைப்பிடி; அதைப் பிடித்து அழுத்திக்கொண்டு தான் உழவேண்டும். உழுப்படை என்பது கலப்பையின் அடிப்படை. அதில் அகலமான இரும்புக்கம்பி இருக்கும். அதற்குக் கொழு அல்லது காறு என்று பெயர். அதன் முனை கூராய் இருக்கும். அது பூமியில் பதிந்து மண்ணைக் கிளறும். அப்படிக் கிளறுவதனால் மண், கீழ் மேலாகப்பெயர்ந்து செழிப்பு அடைகிறது.

3. ஏர்க்கால் ஒரு நீண்டதடி. அதன் ஒரு முனை உழுபடையில் பொருந்தி இருக்கும். அதன் மறு முனையை, உழும்போது நுகத்தோடு தொடுப்பார்கள். நுகம் மாட்டின் கழுத்தில் வைக்கும் நீண்ட கனமான தடி. மாடுகள் நுகத் தடியைக் கழுத்தில் வைத்துக்கொண்டு, கலப்பையை இழுத்துக்கொண்டு போகும். உழுவதற்கு மாடுகள் அவசியம் வேண்டும்.

4. உழுதபின் நிலத்தை நன்றாய் உலரவிட வேண்டும். மண் கட்டிகளை உடைத்துப் புழுதியாக்கவேண்டும்; புழுதியைச் சமப்படுத்தவேண்டும். அதற்குப் பலுமரம் என்னும் ஒரு

கருவியை உபயோகிப்பார்கள். பலுமரம் என்பது ஒரு நீண்ட பலகை. அதில் இரும்புக் கம்பிகள் வரிசையாய் அடித்து இருக்கும்; மரக் கம்பிகளை அடிப்பதும் உண்டு.

5. பயிரிடுகிறவர்கள் நிலத்தை இவ்விதமாய்ப் பண்படுத்துவார்கள். கொஞ்சம் மழை பெய்தவுடன் விதை விதைப்பார்கள். சில நிலங்கள் மழையினால் விளைவன. அவைகளுக்கு வானவாரி நிலங்கள் என்று பெயர். வானவாரி நிலங்களில் புழுதியில் விதைப்பார்கள். ஆறு அல்லது ஏரி நீர் பாயும் நிலங்கள் உண்டு. அவைகளுக்குப் பாய்ச்சல் நிலங்கள் என்று பெயர். அப்படிப்பட்ட நிலங்களை நீர்ப் பாய்ச்சிச் சேருக்குவார்கள். அவற்றில் நாற்றுகளை நடுவார்கள்.

6. மழை பெய்தால் பயிர் விளையும்; மழை பெய்யாத இடங்களில் ஆறு, ஏரி, குளங்களில் இருந்து நீர் பாய்ச்சவேண்டும். அப்படிச் செய்தால் பயிர் நன்றாய் விளைந்து நல்ல பலனைக் கொடுக்கும்.

---

## இருபத்தொன்பதாம் பாடம்.

### நீரில் விழுந்த சிறுவன்.

1. ஒரு குடியானவனுக்கு ஒரு சிறுவன் இருந்தான். அவன் எப்பொழுதும் குளக்கரையில் போய் விளையாடுவது வழக்கம். அந்தப்

பையனுக்குச் சுமார் பத்து வயது இருக்கும். அவனுக்குச் சுந்தரம் என்று பெயர். அவனுடைய தகப்பனார், குளக்கரைக்குப் போக



வேண்டாம் என்று அவனுக்குப் பல முறை சொல்லி இருந்தார். அவன் அவர் வார்த்தையைக் கேட்பதில்லை.

2. ஒரு நாள் அவன் சில சிறுவர்களோடு சேர்ந்து கொண்டான்; கையில் பந்தை எடுத்துக்கொண்டான்; குளக்கரைக்கு ஆடப் போனான். சிறுவர்கள் எல்லோரும் சேர்ந்து ஆடினார்கள். சிறுவரில் ஒருவன் வேகமாய்ப் பந்தை எறிந்தான். பந்து குளத்தை நோக்கிப் போயிற்று. சுந்தரம் பந்தை எடுக்க வேகமாய் ஓடினான்; பந்தை எடுத்துக்கொண்டான். ஆயி

னும் ஓடின வேகத்தால் குளத்தில் விழுந்தான். ஒரு நொடிக்குள் நீரில் மூழ்கினன்.

3. சுந்தரம் பயந்து பெருங் கூச்சல் இட்டான். சிறுவர்கள் எல்லோரும், 'சுந்தரம் குளத்தில் விழுந்தான்,' என்று கூவினர்கள். ஐயோ! பாவம்! சுந்தரம் நல்ல பிள்ளைதான். ஆனலும் அவன் தன் தகப்பன் வார்த்தையைக் கேட்பதில்லை. ஆகையால் அவனுக்கு இந்த ஆபத்து நேரிட்டது.

4. அந்த வழியாய் ஒரு பிராமணர் போய்க்கொண்டு இருந்தார். அவர் மிகவும் நல்ல குணம் உடையவர்; எல்லாருக்கும் உபகாரம் செய்கிறவர். அவர், கூச்சலைக்கேட்டு ஓடி வந்தார்; 'என்ன சங்கதி?' என்று விசாரித்தார். 'சுந்தரம் குளத்தில் விழுந்து விட்டான்' என்று சிறுவர்கள் சொன்னர்கள்.

5. அதைக் கேட்டவுடனே அவர் குளத்தில் குதித்தார். சுந்தரத்தைத் தேடினர். சுந்தரம் சேற்றில் அழுந்தித் தத்தளித்தான். இன்னும் ஒரு நிமிஷம் சென்ருல் அவன் இறந்தே இருப்பான். அவனைச் சாக்கிரதையாய்த் தூக்கி எடுத்தார்; பக்குவமாகக் கரை சேர்த்தார். சுந்தரம் மூர்ச்சை அடைந்து ஒன்றும் பேசாமல் இருந்தான். அவர், அவனுக்கு மூர்ச்சை தெளியும்படியான சிகிச்சைகளைச் செய்தார்.

6. இதற்குள் அவனுடைய தாயும் தகப்பனும் சங்கதி தெரிந்து ஓடி வந்தார்கள். சுந்தரம் மூர்ச்சை அடைந்து இருப்பதைக் கண்டு விசனப்பட்டார்கள். கொஞ்சநேரம் சென்றபின் அவனுக்கு மூர்ச்சை தெளிந்தது. அவன் பேச ஆரம்பித்தான். அதைக்கண்டு எல்லாரும் சந்தோஷம் அடைந்தார்கள்.

7. தாயும் தகப்பனும், பிராமணர் அவன் உயிரைக் காப்பாற்றினதற்காக நன்றி கூறினார்கள். அவர்கள் சுந்தரத்தை அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போனார்கள். சுந்தரம் தன் தகப்பனுடைய வார்த்தையைக் கேளாமையால் அவனுக்கு இந்த ஆபத்து நேரிட்டது.

8. பிள்ளைகளே! நீங்கள் உங்கள் தகப்பன்மாருடைய வார்த்தைக்கு எப்பொழுதும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். அல்லாவிட்டால் ஆபத்து நேரிடும். "தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை" என்பதை நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

---

## முப்பதாம் பாடம்.

### வயல்

1. நெல்லு, கேழ்வரகு, சோளம், எள்ளு முதலிய தானியங்கள் விளையும் நிலத்துக்கு வயல் என்று பெயர். வயல்களில் இரண்டு

விதம் உண்டு. ஒன்றுக்கு நன்செய் என்றும், மற்றதற்குப் புன்செய் என்றும் பெயர்.

2. நெல்லுப் பயிர்செய்யும் நிலம் நன்செய் எனப்படும்; கேழ்வரகு, எள்ளு, கொள்ளு முதலிய பயிர்கள் விளையும் நிலம் புன்செய் எனப்



படும். நன்செய் நிலம் பெரும்பாலும் ஆறு ஏரி, குளம் முதலிய பெரிய நீர் நிலைகளை அடுத்து இருக்கும். புன்செய் நிலத்தில் ஜலவசதி குறைவு. ஆகையால் கிணறுகளில் இருந்து ஜலத்தை இறைப்பார்கள்.

3. வயல்களில் பயிர் நன்ருய் விளைய வேண்டுமானல், அவைகளை நன்ருய்ப் பண் படுத்த வேண்டும். அவைகளில் உள்ள கல், முள், புல், பூண்டு முதலியவற்றை அகற்றவேண் டும். பிறகு நிலத்தை நன்ருய் உழவேண்டும்

பயிர் செழிப்பாய் வளர்ந்து நல்ல பலனைத் தர வேண்டுமானால், நிலத்துக்கு எரு இடவேண்டும். சாணி, சருகு, சாம்பல், பச்சைத்தழை, ஆட்டுப் புழுக்கை முதலியவை நல்ல எருவாகும்.

4. இவ்விதமாய் நிலத்தைப் பண்படுத்திய பின், நீரைக் கட்டி, மண்ணைச் சேருக்க வேண்டும். அப்படிச் செய்தபின் நெல்லை விதைக்க வேண்டும். விதைக்கும் நெல் முற்றி நன்றாய்க் காய்ந்து இருக்கவேண்டும். அப்படிப் பட்ட நெல்லை விதைத்தால் அது நிலத்தைப் பிளந்துகொண்டு முளையாய் வெளியே வரும். பிறகு வளர்ந்து, முற்றிக் கதிர் விடும்; கதிரில் ஏராளமான நெல் அகப்படும்.

5. நெற்பயிருக்கு எப்பொழுதும் ஜலம் குறையாமல் இருக்கவேண்டும். ஆகையால் நன்செய் நிலங்களுக்கு வரம்பு உயரமாய்க் கட்டவேண்டும். அப்படிக் கட்டினால் ஜலம் வயலில் நிறைந்திருக்கும்; பயிர் நன்றாய் வளரும்.

6. புன்செய் நிலங்களுக்கு நீர் அவ்வளவாய் வேண்டியதில்லை. ஆயினும், அவைகளையும் நன்றாய்ப் பண்படுத்த வேண்டும். அவைகளுக்கு ஒன்றைவிட்டு ஒருநாள் கிரமமாய் நீர் பாய்ச்சினால் போதும். ஆனால், காலம் தப்பாமல் நீர் பாய்ச்சவேண்டும்.

7. எல்லா நிலங்களும் ஒரே தன்மை உடையவை அல்ல. சில நிலங்கள் இயல்பாகவே செழிப்பானவை. ஆயினும், வருடம்தோறும் பயிரிடுவதனுல் அவற்றின் உரம் குறைந்துபோகிறது. அந்தக் குறைவை எருவினுல் நிறைவாக்க வேண்டும்.

8. நமது ஆகாரத்துக்கு வேண்டிய தானியங்களைப் பயிர்செய்வதற்குப் போதிய நிலம் ஒவ்வொருவருக்கும் இருப்பது நல்லது. சொந்த நிலத்தில் விளையும் தானியம் எவ்விதத்திலும் மேலானது. ஆகையால் நீங்கள் பெரியவர்கள் ஆகும்போது சிறிய அளவு நிலமாவது சம்பாதிக்க முயற்சி செய்யவேண்டும்.

---

## முப்பத்தொன்றும் பாடம்.

### நெல்லு

1. நமக்கு முக்கியமான ஆகாரம் அரிசி. அரிசி, நெல்லில் இருந்து நமக்குக் கிடைக்கிறது. நெல்லு, நாம் பயிர்செய்து விளைவிக்கும் ஒருவகையான தானியம். நெற்பயிர் நெல் விதையிலிருந்து முளைத்து வளருகிறது. அது இரண்டடி முதல் நான்கு அடி வரையிலும் உயர்ந்து வளரும்.

2. நெற்பயிரில் பசுமையான இலைகள் உண்டு. அவைகள் எல்லாம் ஒன்ருகத் திரண்டு தண்டு போலத் தோன்றும். அத் தண்டின்



அடியில் வேர்கள் தோன்றி நிலத்துக்குட் செல்லுகின்றன. அந்த வேர்கள் ஏறக்குறைய ஒரே நீளம் உடையவை. அவை நெற்பயிரின் போஷிப்புக்கு வேண்டிய ஆகாரத்தை நிலத்தில் இருந்து உறிஞ்சிக் கொள்ளுகின்றன.

3. நெற்பயிர் நேராய் வளரும். அதன் நுனியில் நெற்கதிர் தோன்றும். கதிர்கள் தோன்றியபின் இலைகள் உண்டாவதில்லை. ஒவ்வொரு கதிரிலும் சுமார் ஐம்பது நெல்லுகள் இருக்கும். அவற்றை மணிகள் என்பார்கள்.

4. கதிர்கள் முதலில் பச்சை நிறமாய் இருக்கும்; பிறகு அவை முற்றி மஞ்சள் நிறத்தை அடையும். நெல் மணிகள் இளமையில் ஒரு விதமாகவும், முற்றின பின் வேறொரு விதமாகவும் இருக்கும். முற்றின நெல்லுக்குள் அரிசி இருக்கும். அரிசியை மூடியிருப்பது உமி எனப்படும். அதுதான் நெல்லின் மேல்தோல்.

5. நெல்லைக் குற்றி உமியைப் போக்கினால் அரிசி யாகும். நெல்லே நெற்பயிரின் கனி; அதுவே அதன் விதையாயும் இருக்கிறது. முற்றின நெல்லை விதைத்தால், அது முளைத்துப் பயிராகும். குற்றின நெல்லை விதைத்தால், அது முளைப்பதில்லை. உமி போய்விட்டபின் அரிசியை விதைப்பதில் பயன் இல்லை.

6. நெல்லை உரலில் இட்டுக் குற்றினால், உமி வேறாக வந்துவிடும். அரிசியில் ஒட்டியிருப்பது தவிடு. அரிசியை முறத்தில் போட்டுப் புடைத்தால், தவிடு வேறாகும். நெல்லைக் குற்றும்போது சில அரிசிகள் உடைபட்டு நொறுங்கிவிடும். அப்படி நொறுங்கின அரிசிக்கு நொய் என்று பெயர்.

7. அரிசியை உலையில் இட்டுச் சோறாகச் சமைத்து உண்ணலாம். நொய்யைக் கஞ்சியாகக் காய்ச்சிக் குடிக்கலாம்; பலகாரம் செய்யலாம். தவிடு ஆடு, மாடு, கோழிகளுக்கு உண

வாகிறது. உமி அடுப்பு எரிக்க உதவும். உமிக் கரியைக் கொண்டு பல் தேய்க்கலாம். நெல்லைப் பொரித்துச் சாப்பிடுவதும் உண்டு. நெல்லே நமக்கு முக்கியமான உணவாய் இருக்கிறது.

8. நெல்லு உதிர்ந்த பின் தாள்களுக்கு வைக்கோல் என்று பெயர். அது மாடுகளுக்கு உணவாகும்; வீடுகளுக்குக் கூரை வேய்வதற்கும் உதவும். அதைக் கொண்டு மெத்தை, தலையணைகளையும் செய்து கொள்ளுகிறார்கள்.

---

## முப்பத்திரண்டாம் பாடம்.

### ஓநாயும், ஆட்டுக்குட்டியும்.

பிள்ளைகளே! உலகத்தில் ஓநாய்க்கும், ஆட்டுக் குட்டிக்கும் அதிக பகை உண்டு என்று நீங்கள் கேட்டிருப்பீர்களே! ஓநாய், ஆட்டுக்குட்டியைக் கண்டால், அதை எப்படியாவது கொன்று தின்னப் பார்க்கும். ஆதலால், ஆட்டுக்குட்டிகள், ஓநாயின் கண்ணுக்கு மறைந்தே இருக்க வேண்டும். அப்படியில்லாமல் அதன் கண்ணுக்கு எதிரில் வந்தால், அது அதை விடாது. இதை அடியில் வரும் சிறு கதையால் அறியலாம்:—

ஒரு நாள் ஆட்டுக்குட்டி ஒன்று, ஒரு மலை அடிவாரத்திலுள்ள ஆற்றில் தண்ணீர் குடித்துக்கொண் டிருந்தது. அப்போது அந்த



ஆற்றில் ஓர் ஓநாயும் தண்ணீர் குடிக்க வந்தது. அந்த ஆறு மேற்கிலிருந்து கிழக்கில் செல்லுகின்றது. அதன் மேற்குப் பக்கத்தில் ஓநாயும், கிழக்குப் பக்கத்தில் ஆட்டுக்குட்டியுமாக இருந்தன. அப்போது அந்த ஓநாய், ஆட்டுக்குட்டியைப் பார்த்தவுடன், அதை எப்படியாவது கொன்று தின்ன எண்ணங் கொண்டது.

உடனே ஓநாய், ஆட்டுக்குட்டியைச் சண்டைக்கு இழுக்கும்பொருட்டு, அந்த ஆட்டுக்

குட்டியைப் பார்த்து, 'ஓ! ஆட்டுக் குட்டியே! நான் குடிக்கும் நீரை நீ ஏன் கலக்குகின்றாய்?' என்று கோபத்தோடு கேட்டது. அதற்கு அந்த ஆட்டுக்குட்டி நடுநடுங்கி, ஓநாயைப் பார்த்து, 'ஓ! ஓநாயே! நான், நீ குடிக்கும் நீரைக் கலக்க வில்லையே! நீயல்லவோ மேல்பக்கத்தில் இருக்கின்றாய். உன்னிடம் இருந்தல்லவோ நீர் எனக்கு வருகின்றது! இப்படி யிருக்க, நீ குடிக்கும் தண்ணீரை நான் எப்படிக் கலக்க முடியும்? என்மேல் வீண் பழி சொல்லுகிறாயே!' என்றது.

அப்பால் ஓநாய் மறுபடியும் ஆட்டுக்குட்டியைப் பார்த்து, 'இது போனால் போகட்டும். நீ என்னை ஆறு மாதத்திற்கு முன்னே பல முறை வைதாயல்லவா? அப்படி ஏன் செய்தாய்?' என்று மிகவும் கோபத்துடன் கேட்டது.

அதற்கு ஆட்டுக்குட்டி ஓநாயைப் பார்த்து, 'ஐயோ! ஏன் இப்படி பொய் சொல்லுகிறாய்? நான் பிறந்தே இரண்டு மாதம் கூட ஆகவில்லையே! அப்படி யிருக்க, ஆறு மாதத்திற்கு முன் நான் எப்படி வைதிருக்கக் கூடும்? என்மேல் ஏன் வீண் பழி சுமத்துகிறாய்?' என்று மிக வணக்கத்துடன் சொல்லியது.

அப்பால் ஓநாய், 'நீ என்னை வையாவிட்டாலும், உன் தகப்பன் என்னை வைதிருப்பான்.

அவனும் வையாமற் போனாலும், உன் பாட்டனாவது என்னை வைதிருப்பான். நீ வைதால் என்ன? அவர்கள் வைதால் என்ன?' என்று சொல்லிக்கொண்டே, அந்த ஆட்டுக்குட்டியின் மேற் பாய்ந்து, அதை அடித்துக் கொன்றது.

ஆதலால், பிள்ளைகளே! துஷ்டர்கள் பிறர்க்குக் கெடுதி செய்வதற்குத் தகுந்த காரணம் வேண்டாம். காரணம் இல்லாமலே, அவர்கள் அயலாருக்குக் கெடுதி செய்வார்கள்.

# செய்யுட் பாடம்.

## உலகநாதன் செய்த உலகநீதி

1. ஓதாமல் ஒரு நாளும்
   இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு
   சொல்லவேண்டாம்.
3. மாதாவை ஒரு நாளும்
   மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோடு
   இணங்க வேண்டாம்.
5. போகாத இடம் தனிலே
   போக வேண்டாம்.
6. போகவிட்டுப் புறம் சொல்லித்
   திரிய வேண்டாம்.
7. நெஞ்சாரப் பொய்தன்னைச்
   சொல்ல வேண்டாம்.
8. நஞ்சுடனே ஒரு நாளும்
   பழக வேண்டாம்.
9. அஞ்சாமல் தனிவழியே
   போக வேண்டாம்.

10. அடுத்தவரை ஒரு நாளும்
கெடுக்க வேண்டாம்.

11. மனம்போன போக்கெல்லாம்
போக வேண்டாம்.

12. மாற்றானை உறவென்று
நம்ப வேண்டாம்.

13. தனம்தேடி உண்ணாமல்
புதைக்க வேண்டாம்.

14. தருமத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

15. சினம் தேடி அல்லலையும்
தேட வேண்டாம்.

16. குற்றமொன்றும் பாராட்டித்
திரிய வேண்டாம்.

17. கொலை, களவு செய்வாரோடு
இணங்க வேண்டாம்.

18. கொற்றவனோடு எதிர்மாறு
பேச வேண்டாம்.

19. கோயிலில்லா ஊரில் குடி
யிருக்க வேண்டாம்.

20. வார்த்தைசொல்வார் வாய்பார்த்துத்
திரிய வேண்டாம்.

21. மதியாதார் தலைவாசல்
மிதிக்க வேண்டாம்.

22. மூத்தோர் சொல் வார்த்தைகளை
மறக்க வேண்டாம்.

23. எளியாரை எதிரிட்டுக்
கொள்ள வேண்டாம்.

24. சேராத இடந்தனிலே
சேர வேண்டாம்.

25. செய்தநன்றி ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

26. காணாத வார்த்தையைக்
கட்டுரைக்க வேண்டாம்.

27. புண்படவே வார்த்தைதனைச்
சொல்ல வேண்டாம்.

28. புறஞ்சொல்லித் திரிவாரோடு
இணங்க வேண்டாம்.

29. தெய்வத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

30. இறந்தாலும் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.

---

## ஆத்திசூடி

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கம் அது கைவிடேல்.
7. எண் எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டுண்.
10. ஒப்புர வொழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. அஃகம் சுருக்கேல்.
14. கண்டு ஒன்று சொல்லேல்.
15. தந்தை தாய்ப் பேண்.
16. நன்றி மறவேல்.
17. பருவத்தே பயிர்செய்.
18. வஞ்சகம் பேசேல்.
19. இளமையில் கல்.
20. அறனை மறவேல்.
21. கெடுப்ப தொழி.
22. கொள்ளை விரும்பேல்.
23. செய்வன திருத்தச் செய்.

Printed at the T. V. C. Press, Madras - 30-5-'32

## By the Same Author.

| | | | |
|---|---|---|---|
| Tamil Civics for IV Class . . | 0 | 4 | |
| Do. do. for V „ . . | 0 | 5 | |

KALANITHI SERIES

| | | | |
|---|---|---|---|
| Tamil First Reader . . . . . | 0 | 2 | 6 |
| Do. Second Reader . . . . . | 0 | 3 | 0 |
| Do. Third Reader . . . . . | 0 | 4 | |
| Do. Fourth Reader . . . . . | 0 | 5 | |
| Do. Fifth Reader . . . . . | 0 | 6 | |